# இயல்பு கூட்டப்பொருட்கள்

1. இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மூலதனமானிய நிதி (CGF 2021–2022) – திட்டத்தின் கீழ் கிருஷ்ணன்கோவில் நகபுற ஆரம்ப சுகாதார நிலையத்தில் பராமரிப்பு பணி, தொல்லவிளை நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதல் கட்டிடம் கட்டுதல் பணி மற்றும் சரலூர் மீன் சந்தை அருகில் நவீன வணிக வளாகம் கட்டுதல் பணிகள் மேற்கொள்ளுவதற்கு மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி இந்து தமிழ் திசை நாளிதழிதல் 25.02.2021 விளம்பரம் செய்த வகையில் செலவினத் தொகை பட்டியல் படி ரூ.66937 சென்னை செய்தி (ம) மக்கள் விளம்பர துறையின் வாயிலாக கோரியதன்படி Sreshta Communications அவர்களுக்கு விளம்பரம் செய்தமைக்கும் தொகையை வழங்கிடவும் மாமன்றத்தின் அங்கீகாரத்திற்கு

கோப்பு எண்.இ3/12108/2021

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

**தீர்மானம் எண். 363 அனுமதிக்கப்பட்டது.**

2. இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மூலதனமானிய நிதி (CGF 2021–2022) திட்டத்தின் கீழ் கிருஷ்ணன்கோவில் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் பராமரிப்பு பணி தொல்லவிளை நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதல் கட்டிடம் கட்டுதல் பணி மற்றும் சரலூர் மீன் சந்தை அருகில் நவீன வணிக வளாகம் கட்டுதல் பணிகள் மேற்கொள்ளுவதற்கு மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி The New Indian Express மற்றும் தினத்தந்தி நாளிதழில் 21.04.2022 விளம்பரம் செய்த வகையில் செலவினத் தொகை பட்டியல் படி ரூ.131250 சென்னை செய்தி (ம) மக்கள் விளம்பர துறையின் வாயிலாக கோரியதன் படி Ravi Publicity Service அவர்களுக்கு விளம்பரம் செய்தமைக்கும் தொகையை வழங்கிடவும் மாமன்றத்தின் அங்கீகாரத்திற்கு

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.இ3/12108/2021

**தீர்மானம் எண். 364 அனுமதிக்கப்பட்டது.**

3. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான கழிவு செய்யப்படும் வாகனங்கள் பொது ஏலம் அறிவிப்பு படி 18.05.2022–ம் தேதி காலை 11.30 மணிக்கு மாநகராட்சி ஆணையர் முன்னிலையில் ஏலம் நடைபெற்றது. E–Tender முறையில் Tender எதுவும் கோரப்படவில்லை. கழிவு நிலை வாகனங்களும் ஏலம் எடுத்தவர்கள் மற்றும் ஏலத் தொகைக்கான விவரங்கள் கீழ்கண்டவாறு

| வ.எ | வாகன எண் மற்றும் வாகன விவரம் | அரசு நிர்ணயித்த தொகை | ஏலத்தொகை மற்றும் ஏலம் எடுத்தவர் விவரம் |
|---|---|---|---|
| 1. | TN 74 S9273<br>Swarajamazda | ரூ.66000/– | ரூபாய் 1,31,000/– கோல்டன் ஸ்பேர்ஸ், தூத்துக்குடி |

| | | | |
|---|---|---|---|
| 2. | TN 74 L 5167<br>Ashok Leyland | ரூ.60500/– | ரூபாய் 1,92,500/– கோல்டன் ஸ்பேர்ஸ், தூத்துக்குடி |
| 3. | TN 74 S9338<br>Swarajamazda (Dumper Placer Body) | ரூ.67000/– | ரூபாய் 1,41,000/– ஸ்ரீபாலாஜி டிரேடர்ஸ், கோயம்பத்தூர் |
| 4 | TN 74 Q0299<br>Bajai Auto | ரூ.26000/– | ரூபாய் 40,100/– ஸ்ரீதர், நாகர்கோவில் |
| 5. | TN 74 D 2035<br>Swarajamazda (Water Tanker) | ரூ.69000/– | ரூபாய் 1,52,000/– கோல்டன் ஸ்பேர்ஸ், தூத்துக்குடி |
| 6. | TN 74 D 7817<br>Ashok Leyland (Water tanker) | ரூ.79000/– | ரூபாய் 2,21,000/– கோல்டன் ஸ்பேர்ஸ், தூத்துக்குடி |

மேற்படி வாகனங்களுக்கு அரசு நிர்ணயம் செய்த தொகையிலிருந்து கூடுதல் தொகைக்கு ஏலம் எடுத்துள்ள நபர்களுக்கு கழிவு நிலை வாகனங்கள் மற்றும் பதிவு எண் புத்தகங்கள் மன்றத்தின் முன் அனுமதியினை எதிர்நோக்கி வாகனங்கள் வழங்க மாமன்றத்தின் அங்கீகாரத்திற்காக

**அலுவலக குறிப்பு –அங்கீகரிக்கலாம்**

கோப்பு எண்.இ2/2447/2022

**தீர்மானம் எண்.365 அனுமதிக்கப்பட்டது.**

4. நாகர்கோவில் மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TN 74 D 0199 வாகனமானது சுமார் 70000 கி.மீ. கடந்து இயங்கி கொண்டிருப்பதால் இவ்வாகனத்தின் டயர்கள் மற்றும் டியூப் 6 எண்ணம் (Size 7.50–16 Pattern SM 99– முன்பக்கம் 2 டயர்களும் Size 7.50–16 Pattern SL 707–பின்பக்கம் 4 டயர்களும் Tube set ) மோசமான நிலையில் உள்ளதாக வாகன ஓட்டுநர் தெரிவித்துள்ளதாலும், மேற்படி பணிகளை அவசியம் செய்ய வேண்டுமென வாகன பொறுப்பாளர் மற்றும் மாநகராட்சி பொறியாளர் ஒப்புதல் அளித்துள்ளதாலும், மேற்படி பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும் இதற்கான உத்தேச செலவினம் ரூ.58,000/– இம்மாநகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1. அனுமதிக்கலாம்

2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.H2/20366/2016

**தீர்மானம் எண்.366 அனுமதிக்கப்பட்டது.**

5. கன்னியாகுமரி மாவட்ட நகர் ஊரமைப்பு உறுப்பினர் செயலர் அவர்களின் செயல்முறைஆணை எண்.812/2022 நா.உ.தி.கு நாள் 23.05.2022 –இன் படி இம்மாநகராட்சிக்குட்பட்ட நாகர்கோவில் தெற்கு கிராமம் புல எண்.K3/20/6(Pt)7(Pt) 21.6(Pt), 9(Pt).11,12,13, 14, 15,16(Pt), 24/2, 3 (Pt) ,24/4 (Pt) –இல் 9896 சதுரமீட்டர் (2.444 ஏக்கர்) பரப்பளவு இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனை பிரிவுக்கு திரு R.லிங்கராஜ மற்றும் 8 நபர்கள் ஒப்புதல் வழங்க கேட்டதை தொடர்ந்து மனைப்பிரிவு நிபந்தனைகளுடன் ம.வ/நாஉதிகு எண்.16/2022– என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதியும் திஅ/ம.வ/நாஉதிகு எண்.15/2022 என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. உத்தேச மனைப்பிரிவிற்கு மாநகராட்சி விதிகள் மற்றும் வழிமுறைகளை பின்பற்றி உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் பெற்றுக் கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சி பொறியாளர் அவர்களின் 01.06.2022–ஆம் தேதிய அறிக்கையின்படி மேற்படி மனைப்பிரிவில் சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால் ஓடை அமைக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் தெருவிளக்குகள் மற்றும் குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் செய்யப்படவில்லை எனவும் அதற்கான மதிப்பீட்டுத்தொகை ரூ.1,60,000/–மாநகராட்சிக்கு செலுத்தவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மாநகராட்சி கருவூலத்தில் ரூ.1,60,000/– செலுத்தப்பட்டுள்ளது. மேலும் மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு உட்பிரிவு செய்து அதன் நகல் மற்றும் அனுமதி கட்டணம் ரூ.15,000/– சாலை மற்றும் மூலைமூடுக்குகள் 2599.65 சதுரமீட்டர் பூங்கா 729.635 சதுரமீட்டர் மற்றும் உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு –"A" 43.00 சதுரமீட்டருக்கான பரப்பளவு தான பத்திரம் எண்.1921/2022, நாள் 06.05.2022–இன் படி பத்திர பதிவு அலுவலகத்தில் பதிவு செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அரசாணை எண்.181 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 09.12.2020 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரக சுற்றறிக்கை ந.க.எண்.50977/2008/டிபி3 நாள் 05.02.2021–இன் படி தானபாத்திரம் மூலம் பெறப்பட்டுள்ள சாலை, பூங்கா, மற்றும் உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு பகுதியினை மாநகராட்சியின் பொறுப்பில் பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பின்னேற்பு வழங்கலாம்

கோப்பு எண்.எப்.1/5047/2022

**தீர்மானம் எண்.367 அனுமதிக்கப்பட்டது**

6. நாகர்கோவில் மாநகராட்சி அலுவலகத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வரும் திரு எம்.சிவகுமார் என்பவர் , நான் B.E,Mech Engg கல்வித்தகுதி பெற்று தனது ஓட்டுநர் பணியுடன் கூடுதல் பணியாக Electrician Grade –II பணி பார்த்து வந்துள்ளதால் தனக்கு செயல்திறன் பணியாளர் நிலை –II (SKA GR II) பணிக்கு பணி மாறுதல் செய்யக்கேட்டு சமர்ப்பித்துள்ள விண்ணப்பத்தின் மீது அரசின் அனுமதி பெற மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலக குறிப்பு–

நாகர்கோவில் மாநகராட்சியில் ஓட்டுநராகப் பணிபுரிந்து வரும் திரு எம்.சிவகுமார் என்பவர் தான் B.E.(Mech Engg) கல்வித்தகுதி பெற்று தனது ஓட்டுநர் பணியுடன் கூடுதல் பணியாக Electrcian Grade – II பணி பார்த்து வந்துள்ளதால் தனக்கு செயல்திறன் பணியாளர் நிலை– II க்கு (SKA Gr– II ) பணி மாறுதல் செய்யக் கேட்டுள்ளார்.

அன்னார் பார்த்து வரும் ஓட்டுநர் பணியானது தமிழ்நாடு மாநகராட்சி பொது சார்நிலை பணி விதிகள் 1996–ல் Class –III– Group IV Category–I –ல் இடம் பெற்றுள்ளது.

அன்னார் கோரியுள்ள (SKA Gr– II ) செயல்திறன் பணியாளர் நிலை –II பணியானது தமிழ்நாடு மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் சார்நிலை பணிவிதிகள் 1996–ல் Class –III Category IV –ல் இடம் பெற்றுள்ளது.

மேற்படி இரு பதவிகளுக்கும் ஒரே சம்பள விகிதமாகும் GP–2400/– (19500–62000) மாநகராட்சி பணி விதிகளின்படி பொது சார்நிலை பணி விதிகளின் கீழ் பணிபுரியும் பணியாளரை பொறியியல் மற்றும் குடிநீர் பணி விதிகளில் இடம் பெற்றுள்ள பணியிடத்திற்கு மாறுதல் செய்ய விதிகளில் இடமில்லை.

எனவே அன்னாரது கோரிக்கை குறித்து பணி விதிகளை தளர்வு செய்து அன்னாருக்கு பணியிடம் வழங்குவது குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது தெளிவுரை கோரப்பட்டுள்ளது, (கடித எண்.இ1/13777/2021 நாள் 20.01.2022)

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களது கடித எண்.7884/2022/MCP1 , நாள் 08.04.2022–இல் இப்பொருள் குறித்து நாகர்கோவில் மாநகராட்சி மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி அதன் நகலினை அனுப்பி வைக்க கோரப்பட்டுள்ளது.

எனவே திரு எம்.சிவகுமார், ஓட்டுநர் அவர்களது கோரிக்கையின்படி, அன்னாரை தமிழ்நாடு மாநகராட்சி பொது சார்நிலைபணிவிதிகள் 1996–ல் Class –III Group–IV Category I –ல் இடம் பெற்றுள்ள ஓட்டுநர் பணியிடத்திலிருந்து தமிழ்நாடு மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் பணிவிதிகள் 1996–ல் Class –III Category IV –ல் இடம் பெற்றுள்ள செயல்திறன் பணியாளர் நிலை – II பணியிடத்திற்கு பணிவிதிகள் தளர்வு செய்து மாறுதல் செய்து பணியமர்த்த அரசின்அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர் மூலம் உரிய கருத்துருவினை அரசுக்கு அனுப்ப மாமன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.இ1/13777/2021

**தீர்மானம் எண்.368 அனுமதிக்கப்பட்டது.**

7. இம்மாநகராட்சி பகுதியில் இருட்டு மிகுந்த பகுதிகளில் தெருவிளக்கு அமைத்திட நிர்பயா நிதி (Nirbaya Fund) –யில் மேற்க்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலக தொலைபேசி செய்தியில் அறிவுறுத்தப்பட்டது. அதனடிப்படையில் இருள்சூழ்ந்த இடங்கள் குறித்த கடிதம் மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து பெறப்பட்டது.

அதில் குறிப்பிட்ட 10 இடங்களில் கீழ்கண்ட 6 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு அதில் 12 Mt மின் மாஸ்ட் கோபுர விளக்குகள் அமைத்திட ரூ.21.00இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அதனை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பிடவும் மன்றத்தின்அங்கீகாரத்திற்காக.

| வ.எண் | விபரம் |
|---|---|
| 1. | ஒத்தகடை ஜங்ஷன் (குஞ்சன்விளை) |
| 2. | வண்டி குடியிருப்பு ஜங்சன் |
| 3. | ஆசாரிபள்ளம் போலீஸ் ஸ்டேசன் |
| 4. | கீழ பெருவிளை முருகன்கோவில் சந்திப்பு |
| 5. | வீராணிபார்க் ஜங்சன் |
| 6 | களியங்காடு ஜங்சன் |

அலுவலக குறிப்பு– அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.இ4/100/2022

**தீர்மானம் எண்.369 அனுமதிக்கப்பட்டது.**

8. இம்மாநகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தில் இடையூறாக உள்ள இரண்டு மின் கம்பங்களை மாற்றி அமைத்திட ரூ.1,93,530/– வடசேரி மின்வாரியத்திலிருந்து கேட்பு கட்டணம் வரப்பெற்றுள்ளது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி தொகை ரூ.1,93,530/– மின் வாரியத்திற்கு செலுத்தியதும் அங்கீகாரத்திற்காக

அலுவலக குறிப்பு– அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.இ4//01/2021

**தீர்மானம் எண்.370 அனுமதிக்கப்பட்டது.**

9. நாகர்கோவில் மாநகராட்சி எல்கைக்குட்பட்ட வெட்டூர்ணிமடம் தபால் நிலையத்தின் முன்பாக அமைக்கப்பட்டிருந்த பழைமையான பாலம், ஓடை சுத்தம் செய்யும்போது பெயர்ந்து விழுந்து விட்டபடியால் பொதுமக்கள் நுழைவு வாயிலை பயன்படுத்துவதற்கு மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள் என தபால் நிலைய கண்காணிப்பாளர் கடிதம் மூலம் தெரிவித்தபடியால் அவசர அவசியத்தின் பேரில் மாநகராட்சி சட்டப்பிரிவு 15–ன் கீழ் ஜனவரி 2022–ல் உடனடியாக பணி செய்ததற்கும் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு ஜெகதீஸ்குமார் என்பவர் மூலம் பணி செய்தவகையில் ரூ.55,000/– (ரூபாய் ஐம்பத்தி ஐயாயிரம் மட்டும்) செலவினம் மேற்கொண்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும்.

அலுவலக குறிப்பு– அனுமதிக்கலாம்

கோப்பு எண்.2150/2022/இ1

**தீர்மானம் எண்.371 அனுமதிக்கப்பட்டது**

10. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.39–ல் இடலாக்குடி நாயுடு ஆஸ்பத்திரி சமீபம் உள்ள கழிவுநீர் வடிகால் ஓடை பழுதடைந்துள்ளதால் கான்கிரீட் குழாய் அமைத்து வடிகால்ஓடையினை சரிசெய்தல் வேலைக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2,20,000/–க்கு (ரூபாய் இரண்டு இலட்சத்தி இருபதாயிரம்) அனுமதியும், பணியின் அவசரம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி குறுகியகால ஒப்பந்தப்புள்ளி கோரியதும் மன்றத்தின் அங்கீகாரத்திற்காக

அலுவலக குறிப்பு– அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.இ1/3713/2022

**தீர்மானம் எண்.372 அனுமதிக்கப்பட்டது.**

11. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட கடைகளை மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிட மாமன்ற அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

| வ. எண் | இனம் | உரிமதாரர் பெயர் | கடை எண் | நிலுவை தொகை | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | அண்ணா பேருந்து நிலையம் கேப் ரோடு கடைகள் | திரு. உதய சிங் | 9/88A | 1000640/– | 1493200/– |
| 2 | அண்ணா பேருந்து நிலையம் கேப் ரோடு கடைகள் | திரு. பாலா சிங் | 9/88A | 427160/– | 1304100/– |
| 3 | அண்ணா பேருந்து நிலையம் பழைய கடை | திரு. சந்திரசேகரன் | 2 | 210860/– | 324500/– |
| 4 | வடசேரி ஆம்னி பேருந்து நிலையம் கடை | திரு. ஜெரின் | 3 | 702347/– | 758000/– |
| 5 | பெதஸ்தா வணிக வளாகம் கடைகள் | திருமதி. தேவகி ஐயப்பன் | 29 | 64256/– | 272000/– |
| 6 | கோட்டார் கூழக்கடை | திரு. ராமசாமி நாடார் | 1 | 29782/– | 100000/– |
| 7 | சரலூர் மீன் சந்தை உட்புற கடைகள் | திரு. சுரேஷ் | 8 | 16284/– | 155200/– |
| 8 | வடசேரி மீன் சந்தை முன்புற கடை | திரு. S. சுப்பிமணயன் | 1 | 40710/– | 560000/– |
| 9 | வார்டு எண் 51, வடக்கு அஞ்சு குடியிருப்பு குடிநீர் கீழ்நிலை தொட்டி வளாகத்தில் உள்ள கடை | | 1 | – | – |

மேற்காணும் கடைகளின் பட்டியலில் வரிசை எண் 1, 2, 3–க்கான கடைகளுக்கு வருவாய் ஆய்வாளர் (பிரிவு III), தனது அறிக்கையில் மேற்படி கடைகளை உரிமம் பெற்றவர்கள் தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தினால் 31–03–2022 முதல் கடையினை மாநகராட்சி வசம் திரும்ப ஒப்படைப்பு செய்ததின்படி 01–04–2022 அன்று பூட்டி மாநகராட்சி பொறுப்பில் எடுக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி கடைகளுக்கான மாத வாடகை நிலுவை தொகையினை கலம் 6–இல் காணும் அன்னாரின் வைப்புத் தொகையில் இருந்து ஈடு செய்து கடைகளை மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைக்கு உட்படுத்தலாம் என தெரிவித்துள்ளார்.

மேலும் வரிசை எண் 4–இல் காணும் கடைக்கு மாநகராட்சி வருவாய் ஆய்வாளர் (பிரிவு II) தனது அறிக்கையில் வடசேரி ஆம்னி பேருந்து நிலையத்தி கடை எண் 3–ஐ திரு. ஜெரின் என்பவர் உரிமம் எடுத்து நடத்தி வந்த நிலையில் மாத வாடகை ஏப்ரல் 2021 முதல் மார்ச் 2022 முடிய நிலுவை தொகை ரூ 702347/– செலுத்தப்படாமல் இருந்ததால் கடையினை மாநகராட்சியால் பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி கடைக்கு திரு. ஜெரின் என்பவர் செலுத்த வேண்டிய மாத வாடகை நிலுவை தொகையினை கலம் 6–இல் காணும் அன்னாரின் வைப்புத் தொகையில் இருந்து ஈடு செய்துவிட்டு கடையினை மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விடுவதினால் ஏற்படும் நிதியிழப்பிற்கு முந்தைய உரிமதாரரான திரு. ஜெரின் என்பவரை பொறுப்பாக்கியும், சட்ட ரீதியான நடவடிக்கை தொடரவும், அன்னார் வாடகைக்காக வழங்கப்பட்ட காசோலை போதிய பணம் இல்லாமல் வங்கியில் இருந்து திரும்ப வரப்பெற்றுல்லதால் அதற்கான தொகை ரூ 438960/– மேற்படியாரின் வைப்புத் தொகையில் இருந்து ஈடு செய்திடவும், காசோலை திரும்ப வரப்பெற்றமைக்கு வழக்கு தொடர்ந்திடநடவடிக்கை எடுக்கவும் மாமன்ற வழக்கறிஞருக்கு கடிதம் எழுதலாம் என அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் வரிசை எண் 5, 6 மற்றும் 7–க்கான கடைகளுக்கு மாநகராட்சி வருவாய் ஆய்வாளர் (பிரவு IV) தனது அறிக்கையில் மேற்படி கடைகளின் உரிமதாரர்கள் கடையினை நடத்த இயலாமல் மாநகராட்சி வசம் ஒப்படைப்பு செய்துள்ளதின்படி அன்னார் செலுத்த வேண்டிய வாடகை நிலுவைத் தொகைக்கு அன்னார் செலுத்தியுள்ள கலம் 6–இல் காணும் வைப்புத் தொகையில் இருந்து பிடித்தம் செய்து மேற்படி கடையினை மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம் என தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் வரிசை எண் 8–க்கான கடைக்கு மாநகராட்சி வருவாய் ஆய்வாளர் (பிரவு I) தனது அறிக்கையில் கடை எண் 1–ஐ உரிமம் பெற்று ஒன்பது வருடங்கள் முடிவடையாத

நிலையில் மாநகராட்சி வசம் ஒப்படைத்துள்ளதால் மேற்படி கடைக்கு 30-04-2022 வரையுள்ள மாத வாடகையினை செலுத்திடவும், பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி உரிமம் ஒப்படைக்கும்வரை உள்ள மாத வாடகை மள்றும் இதனால் ஏற்படும் நிதியிழப்பிற்கும் உரிமதாரரே பொறுப்பு என்றும் உரிமதாரர் செலுத்திய வைப்புத் தொகையினை திரும்ப வழங்காமல் நிறுத்தி வைத்திடவும், அரசாணை மற்றும் இம்மாநகராட்சி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை நிபந்தனைகள்படியும், மாமன்ற அனுமதி பெற்று மாநகராட்சிக்கு நிதியிழப்புகள் ஏற்படாதவகையில் முறையான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் என தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் வரிசை எண் 9-இல் காணும் குத்தகை இனத்திற்கு மாநகராட்சி வருவாய் ஆய்வாளர் (பிரவு I) தனது அறிக்கையில் மேற்படி குத்தகை இனம் உரிமத்திற்கு விடப்படாமல் உள்ளது என்று அறிக்கை செய்துள்ளார். எனவே மேற்படி கடைக்கான வைப்புத் தொகை ரூ 15000/- என நிர்ணயம் செய்யப்படுள்ளது.

மாநகராட்சி வருவாய் ஆய்வாளர்களின் அறிக்கைகளின்படி அண்ணா பேருந்து நிலையம் பழைய கடை எண் 2, கேப் ரோடு கடை எண்கள 5/88A மற்றும் 5/88B, பெதஸ்தா வணிக வளாக கடை எண் 29, கோட்டார் சுழக்கடையில் கடை எண் 1, வடசேரி ஆம்னி பேருந்து நிலையம் கடை எண் 3, வடசேரி மீன் சந்தை முன்புற கடை எண் 1, சரலூர் மீன் சந்தை உட்புறம் அமைந்துள்ள கடை எண் 8 மற்றும் வார்டு எண் 51, வடக்கு அஞ்சு குடியிருப்பு குடிநீர் கீழ்நிலை தொட்டி வளாகத்தில் உள்ள கடைக்கு மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், மேற்படி கடைகளை மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட வகைக்கு ஏற்படும் நிதியிழப்பிற்கு ஏல நிபந்தனைகளின்படி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவும், ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை கன்னியாகுமரி மாவட்டத்தில் பிரசுரம் ஆகும் ஒரு தினசரி நாளிதழில் சிறிதளவில் ஒரு நாள் மட்டும் விளம்பரம் செய்திடவும், அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு – அ) அனுமதிக்கலாம்.

ஆ) மாநகராட்சி நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.03525/2022/அ6

**தீர்மானம் எண்.373 அனுமதிக்கப்பட்டது.**

12. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான காமராஜர் 5 மாடி கட்டிடத்தில் இரண்டாம் தளத்தில் தெற்கு பக்கம் பெரிய அறைக்கு 23-07-2021 அன்று நடைபெற்ற மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் திருமதி. ஜெயந்தி செல்வமலர் என்பவர் கலந்து கொண்டு ஒப்பந்தபுள்ளி மூலம் உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ 9200/- கோரியிருந்தார். அன்னாருக்கு உரிமம் உறுதி செய்து 12 மாத வாடகை முன் வைப்புத் தொகை ரூ 110400/- செலுத்திட பல முறை தெரிவித்தும் அன்னார் செலுத்தாத காரணத்தினால் மேற்படி அறையினை மீண்டும் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிட மாமன்ற தீர்மான எண் 270, நாள் - 25-01-2022-இல் அனுமதி வழங்கியதன்அடிப்படையில் மேற்படி அறைக்கு 14-03-2022 முதல் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டது. ஆனால் மேற்படி அறைக்கு தொடர்ந்து மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் யாரும் அதில் கலந்து கொள்ள முன்வரவில்லை. மேற்படி அறைக்கு 23-07-2021 அன்று ஒப்பந்தப்புள்ளி மூலம் உயர்ந்தபட்ச மாத வாடகை ரூ 9200/- கோரிய திருமதி. ஜெயந்தி செல்வமலர் என்பவர் தான் 12 மாத வாடகையினை செலுத்துவதாகவும் தனக்கு மேற்படி அறையினை திரும்ப வழங்க கோரி தனது 26-04-2022-ஆம் தேதிய விண்ணப்பத்தில் கேட்டுள்ளதின் அடிப்படையில் அன்னார் 12 மாத வாடகை முன் வைப்புத் தொகை ரூ 110400/- ரஷீது எண் 150/NG1/1/22-23/0000673. 26-4-2022 தேதியில் செலுத்தியுள்ளார்.

எனவே மேற்படி அறையினை திருமதி. ஜெயந்தி செல்வமலர் என்பவருக்கு உரிமம் வழங்கிட மாமன்ற அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

அ.கு – அ) அனுமதிக்கலாம்.

ஆ) மாநகராட்சி நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிமம் வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண் – 937/2020 /அ6

**தீர்மானம் எண்.374 அனுமதிக்கப்பட்டது.**

13. இம்மாநகராட்சியில் அலுவலக பயன்பாட்டில் உள்ள கணினிகளுக்கான லேசர் பிரிண்டரில் பயன்படுத்தப்படும் கம்பேட்டிபில் டோனர்கள் ஓராண்டு காலத்திற்கு வாங்குதல் பணிக்கு மன்ற தீர்மானம் எண்.218 நாள் 25.01.2022-ன் படி ரூ.6,00,000/-க்கு (ஆறு லட்சம்) நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க 06.05.2022 அன்று E- Tender மூலம் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு.

<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>

| | | |
|---|---|---|
| 1. | C.S.Infortech<br>No.550 Amrutha Nilaya<br>Thirumala Balcery Road,Bangalore | மதிப்பீட்டை விட 6.29% குறைவு<br>(ரூ.471400.00) |

| | | |
|---|---|---|
| 2. | Maatharasi Computer Service<br>14/108, Near Canara Bank<br>Ramanputhoor, Nagercoil | மதிப்பீட்டை விட 6.29% கூடுதல்<br>(ரூ.571700.00) |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள C.S.Infortech நிறுவனம் மதிப்பீட்டை விட 6.29% குறைவாக கொடுத்துள்ளதால் கூடுதல் வைப்புத்தொகை ரூ.12,000/-ம் செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு- அனுமதிக்கலாம்

மதிப்பீட்டு எண்.09/2022-23

**தீர்மானம் எண்.375 அனுமதிக்கப்பட்டது**

14. இம்மாநகராட்சியில் அலுவலக கணிணி பயன்பாட்டிற்கு தேவையான பிரிண்டர் மற்றும் இதர பொருட்கள் வாங்கும் பணிக்கு மன்ற தீர்மானம் எண்.217 நாள் 25.01.2022-ன் படி ரூ.98,000/-க்கு நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க 06.05.2022 அன்று மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மூலம் வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு

<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>

| | | |
|---|---|---|
| 1. | M/S. Maatharasi Computer Service<br>(MCS) | மதிப்பீட்டை விட 0.28% குறைவு<br>(ரூ.97,497.00) |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டை விட 0.28% குறைவாக கொடுத்துள்ள M/S. Maatharasi Computer Service நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், வேலை உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு- அனுமதிக்கலாம்

மதிப்பீட்டு எண்.10/2022-23/இ3

**தீர்மானம் எண்.376 அனுமதிக்கப்பட்டது.**

15. இம்மாநகராட்சி வாகனம் TN 74J 2839 -க்கு பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ள அரசு அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் சென்டரான ஆனைமலை ஏஜென்சி மதுரை (பி) லிமிடெட் , நாகர்கோவில்-க்கு பணியின் அவசர அவசியம் கருதி செலவுத்தொகை ரூ.37541/- (ரூபாய் முப்பத்தி ஏழாயிரத்தி ஐநூற்றி நாற்பத்தி ஒன்று) - னை வழங்கிட மன்றத்தின் அங்கீகாரத்திற்காக

அலுவலக குறிப்பு- அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.இ2/5021/2006

**தீர்மானம் எண்.377 அனுமதிக்கப்பட்டது.**

16. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான கடைகளில் ஏலம் போகாத கீழ்காணும் கடைகளுக்கு தொடர்ச்சியாக தொடர் நாட்களில் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 08-06-2022 அன்று நடைபெற்ற மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மாமன்ற பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ, எண் | உரிம இனங்களின் விபரம் | பெயர் | ஒப்பந்தப்புள்ளி ரூ | பொது ஏலம் ரூ |
|---|---|---|---|---|
| 1 | கேப் ரோடு கடைகள் கடை எண் - 9/5-88A | திரு. மதன் சிங் | 48000/- | 77000/- |
| | | திரு. ஆனந்த கிருஷ்ணன் | 53000/- | கேள்வி ஏதும் கேட்கவில்லை |
| 2 | கேப் ரோடு கடைகள் கடை எண் - 9/5-88B | திரு. மதன் சிங் | 46000/- | 81000/- |
| | | திரு. ஆனந்த கிருஷ்ணன் | 50501/- | கேள்வி ஏதும் கேட்கவில்லை |
| 3 | அண்ணா பேருந்து நிலையம் பழைய கடை எண் - 2 | திரு. பிரபு | 22600/- | எவரும் கலந்து கொள்ளவில் லை |
| 4 | வடசேரி மீன் சந்தை முன்புற கடை எண் - 1 | திருமதி. முத்து லெட்சுமி | 10000/- | எவரும் கலந்து கொள்ளவில் லை |
| 5 | சரலூர் மீன் சந்தை உட்புறம் அமைந்துள்ள கடை எண்- 8 | திருமதி. சொர்ணா | 5600/- | எவரும் கலந்து கொள்ள வில்லை |
| 6 | வடசேரி ஆம்னி பேருந்து நிலையம் கடை எண் - 3 | எவரும் கலந்து கொள்ளவில்லை | - | - |
| 7 | பெதஸ்தா வணிக வளாக கடை எண் - 29 | எவரும் கலந்து கொள்ளவில்லை | - | - |
| 8 | கோட்டார் கூழக்கடை கடை எண் - 1 | எவரும் கலந்து கொள்ளவில்லை | - | - |
| 9 | வார்டு எண் 51, வடக்கு அஞ்சு குடியிருப்பு குடிநீர் கீழ்நிலை தொட்டி வளாகத்தில் உள்ள கடை எண் - 1 | திரு. செல்லதுரை சாமி நாடார் | 1000/- | எவரும் கலந்து கொள்ளவில் லை |
| 10 | வடிவீஸ்வரம் தாய்சேய் நலவிடுதி அருகில் உள்ள கடை எண் 5 | எவரும் கலந்து கொள்ளவில்லை | - | - |
| 11 | அண்ணா பேருந்து நிலையத்தில் பயணிகள் அமர்வதற்கான குளிரூட்டப்பட்ட அறை (AC ROOM) பராமரிப்பு மற்றும் அதன் அருகில் சிறிய அளவில் தட்டில் வைத்து தின்பண்டங்கள் விற்பனை செய்திடும் உரிமம் | எவரும் கலந்து கொள்ளவில்லை | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | வடசேரி கிறிடோபர் பேருந்து நிலையத்தில் பயணிகள் அமர்வதற்கான குளிரூட்டப்பட்ட அறை (AC ROOM) பராமரிப்பு மற்றும் அதன் அருகில் சிறிய அளவில் தட்டில் வைத்து தின்பண்டங்கள் விற்பனை செய்திடும் உரிமம் | எவரும் கலந்து கொள்ளவில்லை | – | – |
| 13 | அண்ணா பேருந்து நிலையத்தில் நவீன கட்டண கழிவறையின் வடக்கு பக்கம் உள்ள 10' X 10 ' சதுர அடியில் உள்ள காலியிடம் | எவரும் கலந்து கொள்ளவில்லை | – | – |
| 14 | சலூர் மீன் சந்தை உட்புறம் அமைந்துள்ள கடை எண் – 16 | எவரும் கலந்து கொள்ளவில்லை | – | – |
| 15 | வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையம் Phase I கடை எண்– 2 மற்றும் 4 | எவரும் கலந்து கொள்ளவில்லை | – | – |
| 16 | வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையம் Phase II கடைகள் 15 மற்றும் 16 | எவரும் கலந்து கொள்ளவில்லை | – | – |
| 17 | பெதஸ்தா வணிக வளாகம் கடை எண்கள் 20 மற்றும் 47(ஹால்) | எவரும் கலந்து கொள்ளவில்லை | – | – |
| 18 | இளங்கடை இறைச்சி கடை எண் – 6 | எவரும் கலந்து கொள்ளவில்லை | – | – |
| 19 | வடசேரி கனகமூலம் சந்தை கடை எண் – 200 | திருமதி. தமிழ் மதி | 3500/– | – |
| 20 | நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையத்தில் உள்பக்கம் மாநகராட்சியால் சுட்டிக்காட்டப்படும் இடத்தில் மட்டும் வைத்து 8 நபர்கள் மட்டும் தட்டில் வைத்து பூ வியாபாரம் செய்யும் உரிமம் | எவரும் கலந்து கொள்ளவில்லை | – | – |

அலுவலக குறிப்பு–

1. வரிசை எண்கள் 6, 7, 8, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18 மற்றும் 20–ல் கண்டுள்ள உரிம இனங்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் யாரும் கலந்து கொள்ளாததால் மேற்படி உரிம இனங்களுக்கு தொடர்ச்சியாக தொடர் நாட்களில் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.
2. வரிசை எண்கள் 1, 2, 3 மற்றும் 4–ல் கண்டுள்ள இனங்களுக்கு குறைந்தபட்ச மாத வாடகை வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற மாத வாடகையினைவிட கூடுதல் மாத வாடகைக்கு போகும் என கருதி மேற்படி இனங்களுக்கு தொடர்ச்சியாக தொடர் நாட்களில் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.
3. வரிசை எண்கள் 19–க்கு மாத வாடகையாக ரூ 3500/– என வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற மாத வாடகையினைவிட கூடுதல் மாத வாடகைக்கு போகும் என கருதி மேற்படி கடைக்கு தொடர்ச்சியாக தொடர் நாட்களில் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம். மேலும் ஏலம் போகாத கடைகள் 14, 15, 19, 20, 21, 22, 23, 24, 26, 27, 30, 31, 34, 35, 38, 39, 42, 46, 47, 50, 52. 55, 56, 58, 66. 67, 70. 71. 74. 78, 83, 86, 90, 91, 93, 94, 95, 96. 97, 98, 99, 101, 102, 103, 105, 106, 107, 108, 110, 111, 112, 113, 114, 115, 116, 118, 122, 123, 130, 131, 132. 136, 137, 138, 139, 143, 144, 149, 150, 151, 153, 154, 155, 156, 157, 158, 161, 162, 163, 166, 168, 169. 171. 172, 173, 174, 175, 178, 179, 183, 184, 185, 186, 187, 189, 190, 191, 192, 193, 196, 198, 199, 202, 203, 204, 205, 206, 221, 222, 223, 226, 227, 228, 249, 250, 251, 252 மற்றும் 253–க்கு தொடர்ச்சியாக தொடர் நாட்களில் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.
4. வரிசை எண் 5 மற்றும் 9–இல் கண்டுள்ள இனங்களுக்கு ஏற்கனவே உரிமம் வழங்கப்பட்டிருந்து மாத வாடகையைவிட ஒப்பந்தப்புள்ளியில் கூடுதலாக கோரப்பட்டுள்ளவருக்கு உரிமம் வழங்கலாம்.

மேற்கண்டுள்ளபடி உரிமம் ஒப்படைக்க இறுதி செய்யப்பட்ட கடைகளுக்கு நிதியிழப்பினை தவிற்கும் பொருட்டு கடையினை ஒப்படைக்க அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் உரிமம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண் – 03525/2022/அ6

**தீர்மானம் எண்.378 அனுமதிக்கப்பட்டது.**

17. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான கடைகளில் ஏலம் போகாத கீழ்காணும் கடைகளுக்கு தொடர்ச்சியாக தொடர் நாட்களில் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 18.05.2022, 25–05–2022 மற்றும் 01.06.2022 தேதிகளில் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மாமன்ற பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ, எண் | உரிம இனங்களின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தவர் பெயர் | 18.05.2022 ஒப்பந்தப்புள்ளி தொகை | 25.05.2022 ஒப்பந்தப்புள்ளி தொகை | 01.06.2022 ஒப்பந்தப் புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | வடிவீஸ்வரம் தாய்சேய் நலவிடுதி அருகில் உள்ள கடை எண் 4 | திரு. ரெகு நாராயணன் | – | – | 16501/- |
| 2 | வடிவீஸ்வரம் தாய்சேய் நலவிடுதி அருகில் உள்ள கடை எண் 5 | எவரும் கலந்து கொள்ளவில்லை | – | – | – |
| 3 | வடிவீஸ்வரம் தாய்சேய் நலவிடுதி அருகில் உள்ள கட்டிடத்தின் அடித்தளத்தில் உள்ள கடை எண்– 2 | திரு. சுடலையாண்டி | 2700/- | 2700/- | 2700/- |
| 4 | வடிவீஸ்வரம் தாய்சேய் நலவிடுதி அருகில் உள்ள கட்டிடத்தின் அடித்தளத்தில் உள்ள கடை எண்– 3 | திரு. கிஷோர் | 2700/- | 2700/- | 2700/- |
| 5 | அண்ணா பேருந்து நிலையத்தில் பயணிகள் அமர்வதற்கான குளிரூட்டப்பட்ட அறை (AC ROOM) பராமரிப்பு மற்றும் அதன் அருகில் சிறிய அளவில் தட்டில் வைத்து தின்பண்டங்கள் விற்பனை செய்திடும் உரிமம் | எவரும் கலந்து கொள்ளவில்லை | – | – | – |
| 6 | வடசேரி கிறிடோபர் பேருந்து நிலையத்தில் பயணிகள் அமர்வதற்கான குளிரூட்டப்பட்ட அறை (AC ROOM) பராமரிப்பு மற்றும் அதன் அருகில் சிறிய அளவில் தட்டில் வைத்து தின்பண்டங்கள் விற்பனை செய்திடும் உரிமம் | எவரும் கலந்து கொள்ளவில்லை | – | – | – |
| 7 | அண்ணா பேருந்து நிலையத்தில் நவீன கட்டண கழிவறையின் வடக்கு பக்கம் உள்ள 10' X 10 ' சதுர அடியில் உள்ள காலியிடம் | எவரும் கலந்து கொள்ளவில்லை | – | – | – |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | வடசேரி கனகமூலம் சந்தை கடைகள் | எவரும் கலந்து கொள்ளவில்லை | | | |
| 9 | சரலூர் மீன்சந்தை உட்புறம் அமைந்துள்ள கடை எண்.16 | எவரும் கலந்து கொள்ளவில்லை | | | |
| 10 | வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையம் Phase I கடை எண்– 2 மற்றும் 4 | எவரும் கலந்து கொள்ளவில்லை | – | – | – |
| 11 | வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையம் Phase II கடைகள் 15 மற்றும் 16 | எவரும் கலந்து கொள்ளவில்லை | – | – | – |
| 12 | பெதஸ்தா வணிக வளாகம் கடை எண்கள் 20 மற்றும் 47(ஹால்) | எவரும் கலந்து கொள்ளவில்லை | – | – | – |
| 13 | இளங்கடை இறைச்சி கடைகள் –6 | எவரும் கலந்து கொள்ளவில்லை | | | |
| 14 | இளங்கடை இறைச்சி கடைகள் –3 | எவரும் கலந்து கொள்ளவில்லை | | | |
| 15 | இளங்கடை இறைச்சி கடைகள் –4 | எவரும் கலந்து கொள்ளவில்லை | | | |
| 16 | இளங்கடை இறைச்சி கடைகள் –5 | எவரும் கலந்து கொள்ளவில்லை | | | |
| 17 | நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையத்தில் உள்பக்கம் மாநகராட்சியால் சுட்டிக்காட்டப்படும் இடத்தில் மட்டும் வைத்து 8 நபர்கள் மட்டும் தட்டில் வைத்து பூ வியாபாரம் செய்யும் உரிமம் | எவரும் கலந்து கொள்ளவில்லை | – | – | – |

அலுவலக குறிப்பு–

1. வரிசை எண்கள் 1 முதல் 17 வரையிலும் உள்ள உரிமங்களுக்கு பொது ஏலத்தில் கலந்து கொள்ள யாரும் முன்வரவில்லை.
2. வரிசை எண்கள் 2,5,6,7,9, 10,11,12,13 மற்றும் 17–ல் கண்டுள்ள உரிம இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் வரப்பெறாததால் மேற்படி உரிம இனங்களுக்கு தொடர்ச்சியாக தொடர் நாட்களில் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.
3. வரிசை எண்கள் 1, 3 மற்றும் 4– க்கு உயர்ந்தபட்ச மாத வாடகை வரப்பெற்றுள்ளது. மேற்படி கடைகள் தொடர்ந்து பூட்டிய நிலையில் உள்ளதாலும், மாநகராட்சியின் நிதியிழப்பினை தவிர்த்திடும் பொருட்டு மேற்படி கடைகளுக்கு உயர்ந்தபட்ச மாத வாடகை கோரியவர்களுக்கு உரிமம் வழங்கலாம்.
4. வரிசை எண்கள் 8–இல் காணும் இனத்திற்கான ஏலம் போகாத கடைகள் 14, 15, 19, 20, 21, 22, 23, 24, 26, 27, 30, 31, 34, 35, 38, 39, 42, 46, 47, 50, 52. 55, 56, 58, 66. 67, 70. 71. 74. 78, 83, 86, 90, 91, 93, 94, 95, 96. 97, 98, 99, 101, 102, 103, 105, 106, 107, 108, 110, 111, 112, 113, 114, 115, 116, 118, 122, 123, 130, 131, 132. 136, 137, 138, 139, 143, 144, 149, 150, 151, 153, 154, 155, 156, 157, 158, 161, 162, 163, 166, 168, 169. 171. 172, 173, 174, 175, 178, 179, 183, 184, 185, 186, 187, 189, 190, 191, 192, 193, 196, 198, 199, 200, 202, 203, 204, 205, 206, 221, 222, 223, 226, 227, 228, 249, 250, 251, 252 மற்றும் 253–க்கு தொடர்ச்சியாக தொடர் நாட்களில் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.
5. வரிசை எண் 14, 15 மற்றும் 16–க்கு உயர்ந்தபட்ச மாத வாடகை வரப்பெற்றுள்ளது. மேற்படி கடைகளுக்கு தொடர்ந்து பல மாதங்களாக மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பெற்றும் யாரும் கலந்து கொள்ள முன்வரவில்லை. தற்போது மேற்படி கடைகளுக்கு திருமதி செய்யது அலி பாத்திமா என்பவர் உயர்ந்தபட் மாத வாடகையாக கடை எண்கள் 3, 4, 5, ஆகிய கடைகளுக்கு ஒவ்வொரு கடைக்கும் தலா 500/– என மாத வாடகையாக கோரியுள்ளார். மேற்படி கடைகள் தொடர்ந்து பூட்டிய நிலையில் உள்ளதாலும், மாநகராட்சியின் நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு உயர்ந்தபட்ச மாத வாடகை கோரிய திருமதி செய்யது அலிபாத்திமா என்பவருக்கு மேற்படி கடைகளின் உரிமம் வழங்கலாம்.

மேற்கண்டுள்ளபடி உரிமம் ஒப்படைக்க இறுதி செய்யப்பட்ட கடைகளுக்கு நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு கடையினை ஒப்படைக்க அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் உரிமம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண் – 15709/2021/அ6

**தீர்மானம் எண்.379 அனுமதிக்கப்பட்டது.**

18. இம்மாநகராட்சிக்கு சொந்தமான JCB (TN 74M 3116) வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுது பணிகள் மேற்கொள்ள மற்றும் டயர், டியூப் புதிதாக மாற்றம் செய்ய அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனமான "M/S.Jayaraj Automobile Agency, Nagercoil" மூலம் சம்மந்தப்பட்ட வாகன ஓட்டுநர் பட்டியலிடப்பட்ட பணிகளை மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் (ரூ.50000+ ரூ.34000 = ரூ.84,000/–) பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேற்படி பணிகளை அவசியம் செய்ய வேண்டுமென வாகன பொறுப்பாளர் மற்றும் மாநகராட்சி

பொறியாளர் ஒப்புதல் அளித்துள்ளப்படியால், மேற்படி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் மூலம் பணிகளை செய்வதற்கும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1. அனுமதிக்கலாம்

2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.H2/17975/2016

**தீர்மானம் எண்.380 அனுமதிக்கப்பட்டது.**

19. இம்மாநகராட்சிக்கு சொந்தமான மகாராஜா ஸ்ரீஅவிட்டம் திருநாள் நினைவு மாநகராட்சி காப்பக மைதானத்தில் வாடகை அடிப்படையில் பொருட்காட்சி நடத்திட அனுமதி கோரப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு இவ்வலுவலக 21.04.2022ஆம் தேதியிட்ட அறிவிப்பு மூலம் உயர்ந்தபட்ச நாள் வாடகை நிர்ணயம் செய்திடும் பொருட்டு 27.04.2022ஆம் தேதி மாநகராட்சி ஆணையரிடம் நேரில் ஒரு நாள் வாடகை விபரம் சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டது. அதன்படி கீழ்காணும் இரண்டு விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | பெயர் | அனுமதி காலம் | நாள் ஒன்றிற்கு திடல் வாடகை ரூ. |
|---|---|---|---|
| 1 | திரு. B. சத்திய நாராயணன், FTS IMPEX, 9/31, கங்கை அம்மன் கோவில் தெரு,லெட்சுமிபுரம், சென்னை–41. | 13.05.2022 முதல் 26.06.2022 வரை 45 நாட்கள் | 70,000/– (சரக்கு மற்றும் சேவை வரி, வருமான வரி, தொழில் வரி தனியாக) |
| 2 | திரு.N. சௌந்திர பாண்டியன், LIFE STYLE TRADE FAIR, 34, சொக்க கொத்தான் தெரு, மேல மாசி வீதி, மதுரை–1. | 13.05.2022 முதல் 26.06.2022 வரை 45 நாட்கள் | 49,600/– (சரக்கு மற்றும் சேவை வரி, வருமான வரி, தொழில் வரி தனியாக) |

மேற்கண்டுள்ளபடி வரப்பெற்ற இரண்டு விண்ணப்பங்களில் வரிசை எண். 1–இல் கண்டுள்ள திரு. B. சத்திய நாராயணன் என்பவர் உயர்ந்தபட்ச ஒரு நாள் திடல் வாடகை தொகையாக ரூ.70,000/– கேட்டுள்ளார். எனவே அன்னாருக்கு 13.05.2022 முதல் 26.06.2022 வரை 45 நாட்களுக்கு நில வாடகை தொகையாக ரூ. 31,50,000/–ம் (70,000 x 45) உரிய வரிகளுடன் செலுத்திட அறிவிப்பு வழங்கி தொகை செலுத்தியவுடன் உரிய அனுமதி வழங்கிடவும், மற்றும் மேற்படி நாள்களில் பொருட்காட்சியினை காணவரும் பொதுமக்களின் வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் பொருட்டு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நேக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டத்தை மாமன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.26072/2022/அ8

**தீர்மானம் எண்.381 அனுமதிக்கப்பட்டது.**

20. இம்மாநகராட்சிக்கு சொந்தமான மகாராஜா ஸ்ரீஅவிட்டம் திருநாள் நினைவு மாநகராட்சி காப்பக மைதானத்தில் வாடகை அடிப்படையில் பொருட்காட்சி நடத்திட 13.05.2022 முதல் 26.06.2022 வரை 45 நாட்களுக்கு திரு. B. சத்திய நாராயணன், FTS IMPEX,9/31, கங்கை அம்மன் கோவில் தெரு,லெட்சுமிபுரம், சென்னை–41. என்பவருக்கு நாள் ஒன்றிற்கு திடல் வாடகை ரூ. 70,000/– (சரக்கு மற்றும் சேவை வரி, வருமான வரி, தொழில் வரி தனியாக) செலுத்திடவும் பிற அரசு துறைகளில் பெறப்படவேண்டிய அனைத்து சான்றுகளையும் பெற்று மாநகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டது. அன்னார் பிற அலுவலகங்களில் அனுமதி கிடைக்க 27 நாட்கள் தேவைப்படுவதால் மேற்படி மைதானத்தில் பொருட்காட்சி நடத்திட 25.08.2022 முதல் 09.10.2022 வரை 46 நாட்களுக்கு அனுமதி கோரி திருத்திய மனுவின்படி விண்ணப்பித்துள்ளார். எனவே அன்னாருக்கு 25.08.2022 முதல் 09.10.2022 வரை 46 நாட்களுக்கு நாள் ஒன்றிற்கு திடல் வாடகை ரூ. 70,000/– வீதம் (சரக்கு மற்றும் சேவை வரி, வருமான வரி, தொழில் வரி தனியாக) மாநகராட்சி அலுவலகத்தில் தொகையினை செலுத்திடவும் அனுமதித்து ஆணை வழங்கிட நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

2. இம்மாநகராட்சிக்கு சொந்தமான மகாராஜா ஸ்ரீஅவிட்டம் திருநாள் நினைவு மாநகராட்சி காப்பக மைதானத்தில் வாடகை அடிப்படையில் சர்க்கஸ் நடத்திட 12.06.2022 முதல் 25.07.2022 வரை 43 நாட்களுக்கு திரு டய்ற்றஸ் வர்கீஸ், மேலாளர், ஜம்போ சர்க்கஸ், வரம், கண்ணூர், கேரளா – 670594 என்பவர் அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளார். எனவே அன்னாருக்கு 12.06.2022 முதல் 25.07.2022 வரை 43 நாட்களுக்கு நாள் ஒன்றிற்கு திடல் வாடகை ரூ. 7,500/– வீதம் (சரக்கு மற்றும் சேவை வரி, வருமான வரி, தொழில் வரி தனியாக) மாநகராட்சி அலுவலகத்தில் தொகையினை செலுத்திடவும் அனுமதித்து ஆணை வழங்கிட நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி பொருட்காட்சி மற்றும் சர்க்கஸ் நிகழ்ச்சியினை காணவரும் பொதுமக்களின் வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் பொருட்டு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நேக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.26072/2022/அ8

**தீர்மானம் எண்.382 அனுமதிக்கப்பட்டது.**

21. இம்மாநகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட ஆண்டு குத்தகை உரிம இனங்களுக்கு 2022–2023 ஆம் ஆண்டு முதல் 2024–2025 வரை உள்ள காலத்திற்கு குத்தகை உரிம இனங்களை அனுபவிக்கும் உரிமத்திற்கு அரசாணை எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 19.09.2008–ன் படி 04.05.2022 தேதியில் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை தொடர்ச்சியாக 16.05.2022 மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதில் வரிசை

எண். 1 முதல் 7 உள்ள அனைத்து இனங்களுக்கும் பொது ஏலத்தில் கலந்து கொள்ள எவரும் முன்வரவில்லை. கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | உரிம இனங்களின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தவர் பெயர் | 16.05.2022 ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | கடந்த ஆண்டு உரிமத் தொகை ரூ. | மூன்று ஆண்டு சராசரி தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | கோட்டார் பாரஉந்து நிலையத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | K. முருகன், த/பெ. கோலப்பன், 11/103, ஆறுமுகம் பிள்ளையார் கோவில் தெரு, கோட்டார், நாகர்கோவில். 629002 | 572000/- | 507205/- | 569420/- |
| 2 | முதலியார்விளை வாடகை கார் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | எவரும் கலந்து கொள்ளவில்லை | - | 87600/- | 87600/- |
| 3 | வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள வீடியோ வாலில் ( Video Wall ) விளம்பரம் செய்திடும் உரிமம். | எவரும் கலந்து கொள்ளவில்லை | - | 300000/- | 300000/- |
| 4 | முக்கடல் அணை வளாக பகுதியில் 10X10 சதுர அடி அளவில் தற்காலிக ஸ்டால் அமைத்து தரமான திண்பண்டங்கள் விற்பனை செய்திடும் உரிமம். | எவரும் கலந்து கொள்ளவில்லை | - | புதிய இனம் | - |
| 5 | மாநகராட்சிக்கு சொந்தமான மரங்களின் மேலாதாயம் அனுபவிக்கும் உரிமம் (திருப்பதி நகர் மரங்கள் நீங்கலாக) | எவரும் கலந்து கொள்ளவில்லை | - | 44100/- | 42033/- |
| 6 | அண்ணா மற்றும் வடசேரி பேருந்து நிலையங்களில் வந்து செல்லும் பேருந்துகளிடம் நுழைவு கட்டணம் வசூல் செய்திடும் உரிமம். | எவரும் கலந்து கொள்ளவில்லை | - | 1739022/- | 1818285/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | அண்ணா பேருந்து நிலையத்தில் மாநகராட்சியால் சுட்டி காட்டபட்ட இடத்தில் வீடியோ வால் அமைத்து விளம்பரம் செய்திடும் உரிமம். | எவரும் கலந்து கொள்ளவில்லை | – | புதிய இனம் | – |

அலுவலக குறிப்பு:–

1. வரிசை எண்.1–இல் கண்ட குத்தகை உரிமை இனத்திற்கு உயர்ந்தப்பட்ச ஒப்பந்தப்புள்ளியாக தொகை ரூ.5,72,000/– வரப்பெற்றுள்ளது. மேற்படி ஒப்பந்தப்புள்ளியானது கடந்த ஆண்டு மற்றும் மூன்றாண்டு சராசரியைவிட கூடுதலாக உள்ளது. 23.03.2022, 29.03.2022 மற்றும் 06.04.2022, 13.04.2022 தேதிகளில் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் பொது ஏலத்தில் கலந்து கொள்ளவோ ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கவோ எவரும் முன்வரவில்லை. எனவே 16.05.2022ஆம் தேதியில் மறு ஏலம் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.5,72,000/–க்கு கோரப்பட்ட திரு. K.முருகன், த/பெ. கோலப்பன் என்பவருக்கு குத்தகை உரிம தொகை செலுத்தியவுடன் உரிமம் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
2. வரிசை எண்.2, 3, 4, 5, 6 மற்றும் 7–இல் கண்ட குத்தகை உரிம இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் வரப்பெறாததால் தொடர்ந்து மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

வரிசை எண்.1–இல் கண்டுள்ள இனத்திற்கு அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் குத்தகை உரிமம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.1266/2017/அ8

**தீர்மானம் எண்.383 அனுமதிக்கப்பட்டது.**

22. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.39–ல் இடலாக்குடி நாயுடு ஆஸ்பத்திரி சமீபம் உள்ள மழைநீர் வடிகால் ஓடை பழுதடைந்துள்ளதால் அவ்விடத்தில் கான்கிரீட் குழாய் அமைத்து வடிகால் ஓடையினை சரிசெய்தல் வேலைக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2,20,000/–க்கு மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி 20.04.2022 அன்று E–Tendering முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு

ஒப்பந்தப்புள்ளி விபரம்

| | | |
|---|---|---|
| 1 | திரு.K.கைலாஷ்குமார் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.04% குறைவு (ரூ.212480.30) |
| 2 | திரு.I.கேட்சன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 51.20% கூடுதல் (ரூ.321396.00) |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.K.கைலாஷ்குமார் என்பவர் மதிப்பீட்டை விட0.04% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்கவும், பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்றுவேலை உத்தரவு வழங்கியதும் அனுமதிக்காக

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்

கோப்பு எண்.இ1/3713/2022

**தீர்மானம் எண்.384 அனுமதிக்கப்பட்டது.**

23. இம்மாநகராட்சி பகுதியில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் சவேரியார்கோயில் ஜங்ஷன் முதல் ஈத்தாமொழி ரோடு ஜங்ஷன் வரை உள்ள சாலையில் பாதாள சாக்கடை திட்டம் மற்றும் அம்ரூத் குடிநீர் திட்டங்களால் சேதமடைந்த இடங்களில் தார்தளம் அமைக்க (பொது நிதி 2022-2023) தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.20,60,000/- (ரூபாய் இருபது லட்சத்தி அறுபதாயிரம்)-க்கு அனுமதியும், பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரியதும் மாமன்றத்தின் அனுமதிக்காக அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.இ1/7031/2022

**தீர்மானம் எண்.385 அனுமதிக்கப்பட்டது.**